யாழ்ப்பாணம் நாவாந்துறைப் படிப்பகம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா: 5.00

# வலம்புரி
VALAMPURI

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 16 புதன்கிழமை ( 01-11-2000 ) தொ. பேசி 3378 ஒலி: 317

லாலாசோப்
சண்சயின் சோப்
ஏக விநியோகஸ்தர்
விக்னேஸ்வரா
பல்பொருள்வாணிபம்
923நல்லூர் மார்க்கட்,
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி985)

★ படுகொலைகளின் பின்னணியில்

# 1983ஜூலையில் ஓடிய இரத்த ஆறு
# மீண்டும் ஓடுவதற்கு இடமளியேன்!

## ஜனாதிபதி சந்திரிகா-சூளுரை!!



(கொழும்புவிசேடநிருபர்)

1983ஆம் ஆண்டு ஜூலையில் இந்நாட்டில் ஓடிய இரத்த ஆறு போல் மீண்டுமொரு கறுப்பு ஜூலை ஏற்பட்டு இரத்த ஆறு ஓடுவதை அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. சில தீயசக்திகள் இனக்கலவரத்தை தூண்டிவிட்டு அரசுக்கு களங்கம் ஏற்படுத்துவதற்கு முயற்சிசெய்து வருவதையும் அரசு ஒருபோதும் அனுமதிக்காது,

பண்டாரவளை புனர்வாழ்வு நிலையத்தில் தொழிற்பயிற்சி பெற்ற அப்பாவித் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டமை குறித்து உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும்,

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்றிரவு வானொலி உரையின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

பண்டாரவளை படுகொலை தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா நாட்டு மக்களுக்கு நேற்றிரவு வானொலியில் உரையாற்றினார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சடலம் ஒப்படைப்பு

(கொழும்பு)

விந்துனுவெவ புனர்வாழ்வு தடுப்பு முகாமில் படுகொலை செய்யப்பட்டவர்களில் மேலும் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் திருகோணமலைப் பகுதிக்கு கொண்டு வரப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது.

சின்னத்துரை மோகன் என்ற இளைஞனின் சடலமே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் திருகோண

(8ம் பக்கம் பார்க்க)

## காயமடைந்த இளைஞர்களை நீதிமன்றில் உடன் ஆஜர் செய்க

### நீதி அமைச்சர் உத்தரவு

(கொழும்பு)

பண்டாரவளை புனர்வாழ்வு நிலைய முகாமில் இடம் பெற்ற கொடூரமான தாக்குதலின் போது காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் இளைஞர்களை உடனடியாக நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு, நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் சட்டமா அதிபருக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

படுகாயமடைந்த இவ் இளைஞர்கள் இராணுவத்திடமும், பொலிஸிடமும் சரணடைந்து தடுப்பு முகாமில் பயிற்சி பெற்று வந்தவர்கள். எனவே இவர்களை உடனடியாக நீதிமன்றத்தின் முன்

( 8ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பில் பலத்த பாதுகாப்பு முப்படைகளும் ரோந்துப்பணியில்

(கொழும்பு)

மலையகப் பகுதிகளில் நிலவும் பதற்ற நிலையைத் தொடர்ந்து கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக படைத்தரப்பு அறிவித்துள்ளது.

கொழும்பு நகரில் பொலிஸாருடன் இணைந்து முப்படையினரும் ரோந்துப்பணியில் ஈடுபட்டுள்ளதுடன் கடைகள் வீடுகள் எங்கும் சல்லடை போட்டு சோதனையிட்டும் வருகின்றனர்.

மலையகத்தில்நிலவும்கொந்தளிப்புநிலையைச் சாட்டாக வைத்துநாட்டில் இனக்கலவரத்தை தூண்டுவதற்கு சில நாசகாரக்கும்பல்கள் முயல்வதாலேயே இந்த விஷேட பாதுகாப்பைபடைத்தரப்பு மேற்கொண்டுள்ளது.

இதேவேளை படையினரின் இத்தகைய நடவடிக்கையால் நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் பதற்றம் தணிந்து அமைதி நிலவுவதாகவும் படைதரப்பு மேலும் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

## சிற்றி ஒவ் றிங்கோ நாளை புறப்படும்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறையிலிருந்து திருமலைக்கான 'சிற்றி ஒவ் றிங்கோ' பயணிகள் கப்பல் சேவை நாளை வியாழக்கிழமை இடம்பெறவுள்ளதாக யாழ். சிவில்நிர்வாகக் காரியாலயம் அறிவித்துள்ளது.

இக்கப்பலில் பயணம் செய்வதற்கு பயண அனுமதி பெற்றவர்கள், பயண ஆயத்தங்களுடன் நாளை காலை 7 மணிக்கு யாழ் சிங்கள மகா வித்தியாலயத்துக்குச் சமுகமளிக்குமாறு மேலும் கேட்கப்பட்டுள்ளது. (ந-ஸ்ரீ)

## 13 சடலங்களும் அரசசெலவில் அடக்கம்

மட்டுவில் வடக்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது படையினரால் கைப்பற்றப்பட்டு, யாழ் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட 13 சடலங்களையும் யாழ்ப்பாணத்தில் அரசசெலவில் அடக்கம் செய்யப்பட்டுள்ளதாக யாழ் பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட 13 சடலங்களையும் புலிகளிடம் கையளிப்பதற்கு படையினர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரின் உதவிகோரியபோதும் அவர்களிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்காதபடியால் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-ஸ்ரீ)

## ஷெல் வீச்சு

தென்மராட்சிப் பகுதியை நோக்கி நேற்றிரவு முழுவதும் அகோர எறிகணை வீச்சுக்கள் இடம் பெற்றது. (5)

நிமலராஜனின் கொலையைக் கண்டித்து

## யாழ் நகரில் இன்று மெளனப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் காலஞ்சென்ற நிமலராஜனின் கொலையைக் கண்டித்து இன்று புதன்கிழமை காலை 10-00 மணியிலிருந்து நண்பகல் 12-00 மணிவரை யாழ் மத்திய பேருந்து நிலையத்தில்

(8ம்பக்கம்பார்க்க)

## ஈ.பி.டி.பியின் வாகனம்மீது கிரனேற் வீச்சு

[யாழ்ப்பாணம்]

ஈ.பி.டி.பி. யின் பிக்கப் வாகனத்தின் மீது வீசப்பட்ட கிரனேற் வெடித்ததில் அவ் வாகனத்தை ஓட்டிச்சென்றவரும், அவரது இரண்டு வயதுக் குழந்தையும் காயமடைந்தனர்.

நேற்று இரவு 7.45 மணியளவில் யாழ். கன்னாதிட்டிச் சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் நாகலிங்கம் இராஜேஸ்வரன் [வயது28], இராஜேஸ்வரன் பிரியதர்சன் [வயது 2] ஆகியோரே காயமடைந்து யாழ் போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். [ந]

## சந்திரசேகரன் எம்.பி தடுப்புக் காவலில்

(கொழும்பு)

நுவரெலியாமாவட்டத்தில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து கைது செய்யப்பட்டு 4 ஆம் மாடியில்வைத்து விசாரிக்கப்பட்டுவரும் ஐ.தே.க. எம்.பி சந்திரசேகரனை சட்டத்தரணியும், யாழ் மாவட்ட தமிழ்க் காங்கிரஸ் எம்.பியுமான அ. விநாயகமூர்த்திபார்வையிடச் சென்றபோதும் அவருக்கு அனுமதி வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை

(8ம் பக்கம் பார்க்க)

## படத்தில்பார்த்த காட்சி யமனாகமாறியபரிதாபம்!

ரூபவாஹினியில் காண்பிக்கப்பட்ட ஹிந்திப் படம் ஒன்றில் தான்பார்த்த காட்சியை நடித்து காட்ட முயன்ற 9 வயதுச் சிறுவன் ஒருவன் கழுத்தில் கயிறு இறுக்கியதால் மரணமான பரிதாபச் சம்பவமொன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது. தொழுகம என்ற சிங்கள கிராமத்தைச் சேர்ந்த நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் கே.என் அனுராசம்பத் என்ற சிறுவனே இவ்வாறுமரணமானவராவார். (8ம்பக்கம்பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறுவிளம்பரம்

### தவறிவிட்டது (மோதிரம்)

R. எழுத்து பொறிக்கப்பட்ட ¾ பவுண் மோதிரம் ஆரியகுளம் சிவில் காரியாலயத்திற்கு அண்மையிலோ அல்லது வழியிலோ தவறிவிட்டது கண்டு எடுத்தவர்கள் தயவு செய்து ''சிற்றிரெலி கொம்'' இராமநாதன் வீதி, வளாக சந்தியில் ஒப்படைக்கவும் சன்மானம் நன்றியுடன் வழங்கப்படும்.

### வருகை தரவும்

உடற்கல்வி டிப்ளோமா இறுதி வருட பரீட்சை எடுத்த மாணவர்கள் உட்பட அனைத்து உடற்கல்வி மாணவர்களையும் இன்று மு. ப. 10.30 மணிக்கு விரிவுரை மண்டபத்திற்கு வருகைதரும்படி, உடற்கல்வி மாணவமன்றத் தலைவர் என். விஜயகுமார் கேட்டுக்கொள்கிறார்.

(செ)

## இராசி பலன்

01 11-2000
(ஐப்பசி 16, புதன்)
பஞ்சமி மா 6.31 வரை
மூலம் பி. ப 2.39 வரை
ராகு காலம் 12. 04-1. 34
சுபநேரம் 4. 34- 6.04
மரணயோகம்பி.ப2.39வரை
ஸ்கந்த பஞ்சமி

★ மேடம்
உடல் உபாதை, தேவையற்றபயம், பிரயாணம், கட்டுப்படுதல்.

★ இடபம்
எதிரிகளால் அச்சம், உடல் பலவீனம், காரிய தாமதம், பேச்சுசுகம்.

★ மிதுனம்
விருந்துபசாரம், களஸ்திர சுகம், பிரயாணம், கௌரவம், வாகனவசதி.

★ கடகம்
மகிழ்ச்சியான சம்பவம், சத்துரு ஜெயம், நோய் குணமடைதல், காரியசித்தி.

★ சிங்கம்
பிரயாணத் தடை, சிறு வியாதி, குடும்பக்கவலை, அபகீர்த்தி.

★ கன்னி
பயந்த சுபாவம், நம்பிக்கைக்குறைவு, கல்விமேன்மை, முயற்சிமந்தம்.

★ துலாம்
பிரயாணம், தனவரவுர் இனிய சம்பவம், உறவின, உதவி, காரியஜெயம்.

★ விருச்சிகம்
விதண்டாவாதம், காரிய நட்டம், மதிப்புக் குறைவு, தனவிரயம்.

★ தனுசு
ஆத்ம சிந்தனை, உடல் ஆரோக்கியம், போசன சுகம், சயனசுகம்.

★ மகரம்
பிரயாண அலைச்சல், நித்திரைக்குறைவு, காரியதாமதம், சுபசெலவு.

★ கும்பம்
சென்ற இடத்தில் செல்வாக்கு, காரியம் கைகூடும், தனவரவு, உறவினர்சந்திப்பு.

★ மீனம்
தொழிலில் பாராட்டு, காரியம்கைகூடும், மதிப்பளித்தல், பெரியோர் சந்திப்பு.

- வளவன்

## இக, பர...

[7ம் பக்கத் தொடர்ச்சி]

முடியாத பொழுது அரிசிமா இடியப்பத்தை பாலில் தோய்த்து உண்ணலாம் அத்துடன் எந்த நேரமும், எக்காரியம் செய்கின்ற பொழுதும் 'ஓம் முருகா' என மனதிற்குள் நினைத்தபடி இருந்தால் வயிற்றுப் புண்ணும் மாறி விடும்.

சித்த, ஆயுள்வேத நிபுணர்கள் கூறுகின்றார்கள். தொடர்ந்து 10தினங்கள் எந்த விதமான உணவுமில்லாமல் பால் மட்டும் உண்டுவந்தால் மனதில்கவலையும் இல்லாது அல்சர் என்கின்ற புண் மாறிவிடும். கவலையைமறக்கமுருகன்மந்திரமேசாலச்சிறந்தது.

உபவாசத்திற்கும் உடல் நலத்திற்கும் நிறையத் தொடர்பு உண்டு சதா உண்டு உண்டு வயிற்றை நிரப்புகிறோம். உணவுகளை சுமிபாடு அடையச் செய்யும் உறுப்புகளுக்கு மாதத்தில் ஒரு நாள் ஆவது ஓய்வு கொடுக்க வேண்டாமா? ஆண்டுக்கு ஆறு நாள் ஆவது ஓய்வு கொடுக்க வேண்டாமா? ஓய்வு தருவதால் மிகுந்த உடல் நலமுண்டாகிப் உபவாசத்திற்கு மறுநாள் உடம்பு மிக்க ஆரோக்கியமாக இருக்கும்.

### விரத அனுஷ்டிப்பு

ஏன் நாம் விரதம் இருக்க வேண்டும். பட்டினி வேறு, விரதம் வேறு. உணவு இன்றி உபவாசம் இருப்பதால் மனம் முதலிய கருவிகள் ஒடுங்கும் அதனால் தியானம் புரிய மிகுந்த வசதியாக இருக்கும். நன்றாக செபம், தவம் செய்யவும், இறைவனை ஒரு மனதுடன் வழிபடவும் முடியும். ஆதலால் உபவாசத்தை கந்த சஷ்டியில் மேற்கொள்வது உத்தமம், இம்மை, மறுமை இன்பங்களை எளிதில் தர வல்லது கந்த சஷ்டி விரதம் எனவே எல்லோரும் சஷ்டி விரதத்தில் கலந்து கொண்டு முருகவழிபாடு செய்து முருகன் பாதாரவிந்தத்தை அடைவோமாக.

□ □ □

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம்-2000

1980ஆம் ஆண்டின் 44ஆம்இலக்கத் தேருநர்களைப் பதிவு செய்தல்சட்டத்தின் 12 (1)ஆம்பிரிவின்படி2000ஆம் ஆண்டுக்குரியதேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டதென்று இத்தால் அறிவித்தல்கொடுக்கப்படுகின்றது.

(2) நற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள். | பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள். |
|---|---|
| 2.1. மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் | அரசாங்க அதிபர்அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2.2. பிரதேச செயலகம் | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்கள் அடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதா என்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக் கொள்ளலாம்.

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லையெனக்காணும் ஒவ்வொருவரும் 2000 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் விடுவித்துக் கொள்ளலாம்.

4.1. இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்குதங்கள் பகுதி கிராம உத்திபோகத்தர்ஊடாகஎழுத்துமூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

4.2. பதியப்படுவதற்கான தகைமைபற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும், இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பிவைப்பார்.

**பதிவு அலுவலர்**
தேர்தல்மாவட்ட இலக்கம் 10,
யாழ்ப்பாணம்.

செயலகம்,
யாழ்ப்பாணம்.

ஒரு தேருநராக பதியப்படுவதற்கான

## விண்ணப்பப் பத்திரம்-2000

- - - - - - - - - - - - - - பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம் யாழ்ப்பாணம்.

- - - - - - - - - - - - - - - - - ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்து கொள்ள இத்தால் விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2.1; முழுப்பெயர்:
- - - - - - - - - - - - - - - -

2.2: முகவரி:
- - - - - - - - - - - - - - - -
- - - - - - - - - - - - - - - -

2.3 பிறந்த திகதியும் வயதும்:
- - - - - - - - - - - - - - - -

2.4 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?
- - - - - - - - - - - - - - - -

2.5 பால்: - - - - - - - - - - - - - - -

2.6 இனம்: - - - - - - - - - - - - - - -

2.7 பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக.
- - - - - - - - - - - - - - - -

2.8 தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்:
- - - - - - - - - - - - - - - -

2.9 கிராம உத்தியோகத்தரின் பிரிவு:
- - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - -
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி: - - - - - - - -

### கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகிறது / செய்யப்படவில்லை: சிபார்சு செய்வதாயின் பின்வரும் விபரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.
வாக்கெடுப்புப் பிரிவு:
- - - - - - - - - - - - - - - -

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம்: - - - - - - - -

வீட்டு இலக்கம்: - - - - - - - - - - - - - -

கிராமம் / வீதி: - - - - - - - - - - - - - - -

- - - - - - - - - - - - - - - -
கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பிரிவின் இலக்கமும்

திகதி: - - - - - - - - [கி-989]

# நல்லூர் பிரதேசசபை - திருநெல்வேலி 2001ம் ஆண்டுக்கான

# கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பனவற்றை 2001 ம் ஆண்டு தை மாதம் 1 ம் திகதி தொடக்கம் 2001ம் ஆண்டு மார்கழி மாதம் 31 ம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 15-11-2000 ம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணிவரை நல்லூர் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை 'தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளகேள்விப் பெட்டியில்உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை 'உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்' என முகவரியிட்டு அனுப்பி வைத்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்கமுடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 10.11.2000 ம் திகதி நண்பகல் 12.00 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலி, கொக்குவில் சந்தை, திருநெல்வேலி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் பொருட்டு விண்ணப்பப்பத்திரங்களை பெற்றுக் கொள்ள விரும்பின் ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே 15,00,000 - ற்கும் 2,00,000/- ற்கும் 2,00,000/- ற்கும் குறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படமாட்டாது.

கோயில் தோட்டம் மாட்டிறைச்சிக்கடை, கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக்கடை ஆகியவற்றிற்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்களாகவே இடத்தை தெரிவு செய்து கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக் கடைக்கான இடம் இருபாலை வீதிக்கு தெற்குப் புறமாகவும் ஸ்ரேசனை அண்மித்தும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியை 20-11-2000 ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள வேண்டும். மேலதிக விபரங்களை நல்லூர் தலைமை அலுவலகத்திலும் கொக்குவில் / நல்லூர் உப-அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

**குறிப்பு:-**

1. திருநெல்வேலிச் சந்தைக்கடை இல 1,11 ஆகியவற்றின் மூன்று மாத வாடகை, ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
2. சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருட்களின் பெறுமதியின் 3% ற்கு மேல் சந்தை வரி அறவிடக்கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கரவண்டிக்கு ரூபா 1/- ற்கும் மோட்டார் சைக்கிலுக்கு ரூபா 2/- ற்கும் மேல் பாதுகாப்புக்கட்டணம் அறவிடக்கூடாது.

| சந்தைகள், இறைச்சிக் கடைகள் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| **நல்லூர் உப - அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை | 500-00 | 10,000-00 | 32,40,000-00 |
| 2. திருநெல்வேலிச்சந்தை து. ச. வ. பாதுகாப்பு நிலையம் | 500-00 | 5,000-00 | 3,35,650-00 |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல: 11 | 350-00 | 3,000-00 | 45,150-00 |
| 4. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இல: 1 | 350-00 | 3,000-00 | 45,150-00 |
| **கொக்குவில் உப-அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில் ஆடியபாதம்சந்தை | 500-00 | 5,000-00 | 99,900-00 |
| 2. ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350-00 | 3,000-00 | 44,625-00 |
| 3. ஆடியபாதம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 350-00 | 3,000-00 | 47,500-00 |
| 4. கொக்குவில் உப - அலுவலக மாட்டிறைச்சிக்கடை | 350-00 | 3,000-00 | 68,250-00 |
| 5. கொக்குவில் உப - அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350-00 | 3,000-00 | 40,000-00 |
| 6. பலாலி வீதி, ஆட்டிறைச்சிக்கடை | 350-00 | 3,000-00 | 58,800-00 |
| 7. கோயில் தோட்டம் மாட்டிறைச்சிக் கடை | 350-00 | 3,000-00 | 15,000-00 |
| 8. கோண்டாவில் மாட்டிறைச்சிக் கடை | 350-00 | 3,000-00 | 20,000-00 |
| 9. ஆடியபாதம் சந்தை து. ச. வ. பாதுகாப்பு நிலையம் | 350-00 | 3,000-00 | 12,000-00 |

க. மணிபல்லவராஜன், (ஜே. பி. யூ. எம்.)
தலைவர்,
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
26-10-2000

(கி - 988)

# பண்டாரவளைபடுகொலை பாரா.மன்றுகூட வேண்டும்

## -ஜே.வி பி.பிரச்சார செயலர்

(கொழும்பு)

பண்டாரவளை விந்தனுவெவ புனர்வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவம் பற்றி ஆராய்வதற்கு பாராளுமன்றம் அவசரமாக கூட்டப்படவேண்டும்.

ஜே. வி. பி. பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்ச மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தோன்றியுள்ள குழப்ப சூழ்நிலை தொடர்பாக, விளக்குவதற்கு ஜே.வி.பி. நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு முகாமில் படுகொலை செய்யப்பட்டவர் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி அக்கொடூரத்தை நியாயப்படுத்த அரசு முனைகிறது எனவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார். (செ)

# திருமலை பகுதியில் மீன்பிடிக்க தடை

(கொழும்பு)

திருமலை துறைமுகத்தின் பாதுகாப்பு கருதி துறைமுகத்தின் வெளிப்பகுதியில் மீன்பிடிப்பதற்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டிருப்பதாகபாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த 23 ஆம் திகதி விடுதலைப்புலிகளின் கடற்கரும்புலிகள் துறைமுகத்தின் உட்பகுதிக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியதை அடுத்தே இத் தற்காலிகதடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னர், காலை 6 மணியில் இருந்து மாலை 6 மணி வரையும் மேற்படி பகுதியில் மீன்பிடிப்பதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்தடை உத்தரவினால், இப் பகுதிகளில் கடற்றொழிலில் ஈடுபட்டுவந்த கிண்ணியா, மூதூர், கொட்டியாறு பிரதேச மீனவர்கள் மிகுந்த பாதிப்பினை எதிர்நோக்கியிருப்பதாக தெரிய வந்துள்ளது. (உ)

உரும்பிராய் இளைஞரை

# அநுராதபுர நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தில் இம்மாதம் ஆஜராகுமாறு மல்லாகம் நீதிவான் தெரிவித்துள்ளார்.

பிரஸ்தாப இளைஞருக்கு பிரயாண சீட்டு வழங்குவதில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும் எனவும் உரிய அதிகாரிகளுக்கு அந்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சுப்பிரமணியம் சிறீகாந்தன் (வயது22) என்ற அவ் இளைஞன் அனுராதபுரம் செல்லுமவரை பத்தாயிரம் ரூபா சரீரப்பிணையில் செல்ல மல்லாகம் நீதிமன்றம் அனுமதித்துள்ளது. (க-12)

# ம.ம.முன்னணி தலைவரை விடுவிக்க சுவரொட்டிகள்

(கொழும்பு)

பண்டாரவளை படுகொலைச் சம்பவம் மற்றும் அதன் தொடர்ச்சியாக மலையகத்தில் ஏற்பட்ட பதற்ற நிலை போன்றவை காரணமாக. கைது செய்யப்பட்ட மலையக மக்கள் முன்னணி தலைவர் பெ. சந்திரசேகரனை விடுதலை செய்யுமாறு கோரும் சுவரொட்டிகள் பல மலையகத்தின் பல பகுதிகளிலும் ஒட்டப்பட்டிருந்தன.

நுவரெலியா மாவட்ட தோட்டங்கள் மற்றும் பேந்திர இடங்களிலேயே இச் சுவரொட்டிகள் கூடுதலாக காணப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது

சந்திரசேகரனை விடுதலை செய், தமிழனை தமிழனே காட்டிக் கொடுக்காதே. போன்ற வாசகங்கள் எழுதப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் பொகவந்தாலையில் தொழிலாளர்களால் ஆர்பாட்ட ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டதாகவும் இவ் ஊர்வலத்தில் பெருமதொகையானோர் கலந்து கொண்டதாகவும் நேற்றைய பிந்திய தகவல்கள் தெரிவித்தன. (க)

# சூரசம்ஹாரம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு தெற்கு அருள்மிகு சங்காதி கலட்டி ஸ்ரீசங்கரநாதர் முருகமூர்த்தி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை மாலை 4-00 மணிக்கு சூரசம்ஹாரம் நடைபெறவுள்ளது. (செ-75)

★ ★ ★ ★

(இணுவில்)

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் நாளை வியாழக்கிழமை காலை 9-00 மணிக்கு கந்தஷஷ்டி பூஜை, அபிஷேகத்துடன் ஆரம்பமாகி மாலை வசந்தமண்டப பூஜையும் நடைபெற்று பி. ப. 3-00 மணிக்கு சூரசம்ஹாரம் நடைபெறவுள்ளது. (செ-49)



# கண்ணீர் அஞ்சலி

## திரு.சி. நவநீதகிருஷ்ணன்

அவர்கள்

இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைவதுடன் எமது அஞ்சலிகளை தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதுடன் அவர் தம் குடும்பத்தினருக்கும் எமது அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**சிவாஸ் மணிக்கூட்டு தொழிலகம்**
24, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்
(ஹட்டன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)

(கி-990)

# கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரணதர மாதிரிப் பரீட்சை - 2000

## வர்த்தகமும் கணக்கியலும்

நேரம்:- 1மணி

ஆக்கம்:- S. தயாளன்
உயர் தொழில்நுட்ப நிறுவனம்

### எல்லா வினாக்களுக்கும் விடை தருக

01) கூட்டுறவின் அடிப்படைத் தத்துவம்
1) ஒத்துழைப்பு 2) சிநேகித பூர்வமான உறவு
3) பொதுவுடமை 4) சேவை

02) வாகனம் ஒன்றை காப்புறுதி செய்வதன் மூலம்
1) வாகனவிபத்துக்கள் தவிர்க்கப்படும்
2) வாகனங்களின பெறுமதி அதிகரிக்கப்படும்
3) சாரதிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்
4) விபத்து ஏற்படின் நட்ட ஈடு வழங்கப்படும்

03) 1999 ம் ஆண்டு உருவாக்கப்பட்ட தனியார் வங்கி எது?
1) நேசன் ராய்ட் வங்கி 2) முஸ்லிம் லிக் வங்கி
3) இந்தியன் ஓவசீஸ் வங்கி 4) சாட்டட் வங்கி

04) இலங்கையில் அண்மைக் காலத்தில் கூடுதலான ஏற்றுமதி வருமானத்தை பெற்றுத் தரும் ஏற்றுமதிப் பொருள்
1) பெற்றோலியம் 2) தேயிலை
3) தைக்கப்பட்ட ஆடைகள் 4) சிறுதானியம்

05) விளம்பரப்படுத்தலுக்கும் பிரசித்தப்படுத்தலுக்கும் இடையிலான பிரதான வேறுபாடு
1) நம்பகத் தன்மை 2) செலவு 3) கிடைப்பனவு 4) வேகம்

பின்வரும் சொற்பதங்கள் எவற்றுக்கு பொருத்தமானதெனக் கொண்டு அவ் இலக்கத்தின் கீழ் கீறிடுக.
a) பிரித்தெடுத்தல் b) உருமாற்றம் c) கோப்புச் செய்தல்
d) இடம்மாற்றுதல் e) சேவை செய்தல் f) காலம் மாற்றுதல்

06) மரம் காட்டில் இருந்து நகரத்துக்கு கொண்டு வருதல்
1) a 2) b 3) c 4) d

07) பண்பாயாக மாற்றப்படுகின்றது
1) a 2) b 3) c 4) e

08) நடிப்பு மூலமாக மகிழ்ச்சியூட்டப்படுகின்றது
1) a 2) b 3) f 4) e

09) மிகை அறுவடையான முந்திரியப் பருப்பு அரிதான காலம் வரை வைக்கப்படுகிறது
1) a 2) b 3) c 4) f

10) உதிரிப் பாகங்கள் மோட்டார் வண்டி ஆக்கப்படுகிறது
1) a 2) b 3) c 4) f

பின்வரும் மூல ஆவணம் எவற்றுக்கு பொருத்தமானது என அதன் கீழ் கோடிடுக
a) பற்றுச்சீட்டு b) கிரயப்பட்டியல் c) வரவுத்தாள்
d) செலவுத்தாள் e) நாட்குறிப்புக்கைச்சாத்து f) விற்பனைப் பட்டியல்

11) நிறுவனம் ஒன்று பொருட்களை விற்பனை செய்வதன் மூலம் பெறப்படும் வருமனத்தை பதியும் மூலப் பதிவேடு
1) a 2) b 3) c 4) d

12) நிலையான சொத்துக்களின் கடன் கொள்வனவு விற்பனையினை பதிவு செய்வதற்கான மூல ஆவணம்
1) a 2) b 3) c 4) e

13) நிறுவனங்கள் பொருட்களை திருப்பி அனுப்பினால் பதிவு செய்ய மூல ஆவணம்
1) a 2) b 3) c 4) e

14) கடன் விற்பனைக்கான மூல ஆவணம்
1) a 2) f 3) c 4) d

15) கடனுக்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்கான ஆவணம்
1) a 2) b 3) c 4) d

16) கம்பனி ஒன்று பதிவு செய்ய வேண்டிய இடம்
1) பிரதேச செயலகம் 2) கொழும்பு கம்பனிகள் பதிவாளர் அலுவலகம்
3) வியாபார அமைச்சு 4) வரையறுக்கப்பட்ட கம்பனி

17) கூட்டுறவு அமைப்புக்களின் கணக்குகளை கணக்காய்வு செய்பவர்
1) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் 2) மக்கள் வங்கி
3) கூட்டுறவு சபை 4) வரையறுக்கப்பட்ட தேசிய கூட்டுறவு பேரவை

18) பின்வருவனவற்றில் நடைமுறைச் சொத்தில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தும் காரணி யாது?
1) 1000/- கொடுத்து தளபாடம் கொள்வனவு
2) உரிமையாளர் ரூபா 100,000 மேலதிக மூலதனமாக இடுதல்
3) ரூபா 15,000 காசு கொடுத்து பொருட்கள் கொள்வனவு
4) உரிமையாளர் ரூபா 1000 பொருட்களை பற்றுதல்

19) இறுதிக் கணக்குகளை தயாரிக்கும் வேலையா் அறவிடமுடியாக் கடன்களுக்கான ரூபா 800 ஏற்பாடொன்றைச் செய்வதற்குத் தேவைப்படும் குறிப்பேட்டு பதிவு யாது?
1) இலாபநட்டக் கணக்கு ரூபா 800 இலாபநட்டக் கணக்கு செலவு ரூபா 800
2) அறவிடமுடியாக் கடன் கணக்கு வரவு 800 அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு செலவு 800
3) அறவிடமுடியாக் கடன் வரவு 800/- இலாபநட்டக் கணக்கு ரூபா 500 -
4) அறவிடமுடியாக் கடன் ஏற்பாடு 800/- இலாபநட்டக் கணக்கு செலவு 800/-

20) பொதுக் குறிப்பேட்டில் அடங்குபவை?
1) கணக்கு முடித்தல் பதிவுகள்
2) சொத்துக்கள் பொறுப்புக்கள் கணக்குகள்
3) ஆட்குறிக்கும் கணக்குகள் தவிர்ந்தவை
4) ஆட்குறிக்கும் கணக்குகள் மாத்திரம்

21) தாபன நிலையச் செலவின் கீழ் வருபவை?
1) ஐயக் கடன்கள், தேய்மானம் 2) வட்டி, அறவிடமுடியாக் கடன்
3) கட்டிட தேய்வு, மின், காப்புறுதி 4) பெற்றகழிவு, சம்பளம், விளம்பரம்

22) பிற்போடப்பட்ட வருமானச் செலவினத்திற்கு உதாரணம்?
1) கழிவு 2) ஏற்பாடுகள் 3) விளம்பரம் 4) தேய்மானம்

# பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஒக்ரோபர் மாதம் 27-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடாநாட்லிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப் படுகின்ற.ன

### சங்கானை

| | |
|---|---|
| 164014 ஏ | 164014 பி |
| 164207 ஏ | 165526 ஏ |
| 165526 பி | 165526 சி |
| 165526 டி | 165696 ஏ |
| 165696 பி | 165696 சி |
| 165696 டி | 165696 ஈ |
| 165696 ஜி | 166621 ஏ |
| 166622 ஏ | 166724 ஏ |
| 166771 ஏ | 166771 பி |
| 166830 ஏ | 166851 ஏ |
| 169332 ஏ | |

### நல்லூர்

| | |
|---|---|
| 161507 ஏ | 161507 பி |
| 166671 ஏ | 166671 பி |
| 166746 ஏ | 166858 ஏ |
| 166858 பி | 166859 ஏ |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 163940 ஏ | 164178 பி |
| 165874 ஏ | 165875 ஏ |
| 165898 ஏ | 165898 ஏ |
| 165898 சி | 166460 ஏ |
| 166460 பி | 166605 ஏ |
| 166605 பி | 166605 சி |
| 166605 டி | |
| 169333 ஏ | |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 142133 ஏ | 142133 பி |
| 142133 சி | 142133 டி |

### உடுவில்

| | |
|---|---|
| 125010 ஏ | 125010 பி |
| 150638 ஏ | 153256 ஏ |
| 153256 பி | 153256 பி |
| 161735 ஏ | 164185 ஏ |
| 164185 பி | 165570 ஏ |
| 165672 ஏ | 165672 பி |
| 166471 ஏ | 166564 ஏ |
| 166564 பி | 166632 ஏ |
| 166632 பி | 166657 ஏ |
| | 166722 ஏ |
| 166774 ஏ | 166774 பி |
| 166774 சி | 166786 ஏ |
| 166786 பி | 166786 சி |
| 168965 ஏ | 168965 பி |

ஒக்ரோபர் மாதம் 28-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி யாழ். குடா நாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு ரயணம் செய்ய அனுமதி இழங்கப்பட்டவர்களின் பதிவு வலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாகத் தரப் படுகின்றன.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 152499 ஏ | 154237 ஏ |
| 156292 ஏ | 156321 ஏ |
| 156321 பி | 156321 சி |
| 156321 டி | 161118 ஏ |
| 164148 ஏ | 161194 ஏ |
| 161194 பி | 161194 சி |
| 161194 டி | 161194 ஈ |
| 161331 ஏ | 163296 ஏ |
| 163296 பி | 163296 சி |
| 163330 ஏ | 163376 ஏ |
| 163376 பி | 163484 ஏ |
| 163484 பி | 166028 ஏ |
| 166028 பி | 166028 சி |
| 166028 டி | 166028 ஈ |
| 166028 எவ் | 166028 ஜீ |
| 166039 ஏ | 166053 ஏ |
| 166053 பி | 166055 ஏ |
| 166055 பி | 166055 சி |
| 166098 ஏ | 166100 ஏ |
| 166126 ஏ | 166126 பி |
| 666135 ஏ | 166142 ஏ |
| 166142 பி | 166442 ஏ |
| 166251 ஏ | 166251 பி |
| 166251 சி | 163275 ஏ |
| 166339 ஏ | 166339 பி |
| 166339 சி | 166342 ஏ |
| 166342 பி | |
| | 166343 ஏ |
| 166351 ஏ | 168496 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 166000 ஏ | 166000 பி |
| 166174 ஏ | 166174 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 149960 ஏ | 149960 பி |
| 163196 ஏ | 163544 ஏ |
| 163544 பி | 162625 ஏ |
| 163625 பி | 163625 சி |
| 163625 டி | 166146 ஏ |
| 166146 பி | 166146 சி |
| 166147 ஏ | 166147 பி |
| 166185 ஏ | 166185 பி |
| 166185 சி | 166185 டி |
| 166185 ஈ | 166192 ஏ |
| 166271 ஏ | 166271 பி |
| 166290 ஏ | 166305 ஏ |
| 166305 பி | 166305 சி |
| 166305 டி | 166305 ஈ |
| 166410 ஏ | 168477 ஏ |

# பாலர் பாடசாலை முன்னேற்றத்திற்கு முயற்சி

(கொழும்பு)

நாடு முழுவதிலுமுள்ள பாலர் பாடசாலைகளைப் பதிவு செய்து தேசிய கொள்கை ஒன்றின் மூலம் அபிவிருத்திசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

மகளிர் விவகார அமைச்சர் சுமேதா ஜயசேன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மகளிர் விவகாரஅமைச்சு நடத்திய கருத்தரங்கொன்றில் பேசிய பொழுதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஜனாதிபதி செயலணியின் ஆலோசனையின் பேரில் தேசிய கல்வி நிறுவகத்தின் வழிகாட்டலில் இத்தேசிய கொள்கை நடைமுறைப்படுத்தப்படும்.

பாலர் பாடசாலை மாணவர்களின் நலன் கருதி பயிற்சிப் புத்தகங்கள், பயிற்சி உபகரணங்கள் ஆகியவற்றைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கல்வியமைச்சு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(செ)

# இணுவிலில் நாவன்மை போட்டி

(யாழ்ப்பாணம்)

இணுவில் பரராஜ சேகரப் பிளளையார் ஆலயத்தில் எதிர்வரும் டிசம்பர் மாதம் 19ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ள ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசைத் தினத்தை முன்னிட்டு, திருநெறிய தமிழ் மறைக் கழகத்தினால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் நாவன்மைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிக்கான விண்ணப்பங்களை மேற்படி மன்றம் கோரியுள்ளது.

போட்டிகள் யாவும் மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய இரு பிரிவுகளில் நடைபெறவுள்ளது.

மேற்படிகழகத்தால் வெளியிடப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தைமாத்திரம்நிரப்பி மா. இராசரத்தினம், இணுவில் தெற்கு, இணுவில் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(செ)

# தபால்கள் இன்று வரும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடா நாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 407தபால் பொதிகள் இன்று பருத்தித்துறைக்கு எடுத்துவரப்படுமென யாழ். தபாலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை குடாநாட்டுக்குத் தேவையான முத்திரைகள்போதியளவில் எடுத்து வரப்பட்டுள்ளதால் முத்திரைகளுக்கு நிலவிய தட்டுப்பாடு தற்சமயம் நீங்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தபால்கள் அனேகமாக நாளை தரம் பிரித்து விநியோகிக்கப்படவுள்ளது.

(க-3)

## இன்று ஒரு தகவல்

### சும்மா கிடந்த சங்கை ஊதி ஊருக்கு நன்மை செய்த ஆண்டி

ஒரு கிராமம். அதுவும் இந்துக்கள் பலர் வாழும் கிராமம் அங்கு ஓர் கந்தன் ஆலயம் இருந்தது. அவ்வாலயத்தில் பலர் வந்து தங்கிப் போவது வழமை. அதனால் அங்கு ஓர் மடமும் இருந்தது.

அம்மடத்தில் ஆண்டி ஒருவன் இருந்தான். அவன் தினமும் அதிகாலையில் எழுந்து தன் பக்கத்திலுள்ள சங்கையெடுத்து ஊதுவான்.

அவன் சங்கொலி கேட்டதும் ஊர் மக்கள் எழுந்து அவரவர் கடமைகளை செய்வது வழக்கம்.

அந்த ஆண்டிக்கு உற்றார், உறவினர் என யாருமேயில்லை. அதனால் அக்கிராமத்தார்இடும்உணவையுண்டு விட்டு அவர்களுக்கு விசுவாசமாக வாழ்ந்து வந்தான்.

இதுவே அவனது வாழ்க்கையாகவும், வழக்கமாகவும் இருந்து வந்தது. காலங்கள் பல ஓடின.

ஒரு நாள் நள்ளிரவு சில திருடர்கள் அந்தக் கிராமத்திற்கு வந்து ஒரு வீட்டில் பின்புறமாக நுழைந்து கொண்டிருந்தார்கள். அந்த வீட்டில் இருந்தோர் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர்.

மடத்தில் படுத்திருந்த ஆண்டி நுளம்புக்கடி தாங்காமல் நடு இரவு எழுந்து விட்டான். தூக்கக் கலக்கத்தில் விடிந்துவிட்டது, எனக் கருதி அருகே இருந்த சங்கை எடுத்து ஊதினான்.

சங்கொலியைக் கேட்ட மக்கள் பூமியில் பொழுது படர்ந்துவிட்டது எனக்கருதினார்கள்.

அவசரம் அவசரமாக எழுந்தார்கள். திருடர்கள் திருட முயற்சி செய்து கொண்டிருந்த வீட்டாரும் எழுந்துவிட்டனர். வீட்டார் எழுந்ததை அவதானித்த திருடர்கள் எடுத்த பொருட்களை அப்படியே போட்டு விட்டு ஓட முயற்சித்தனர்.

ஆனாலும் வீட்டுக்காரர்களும், அயலவர்களும் அவர்களைத் துரத்திப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்,

அது மாத்திரமின்றி தக்க நேரத்தில் உதவி புரிந்ததாகக் கூறி ஆண்டியை பொலிஸாரும் மக்களும் பாராட்டிக் கௌரவித்தனர்.

எதற்கென அறியாது திகைத்து நின்ற ஆண்டி 'சும்மா கிடந்த சங்கை ஊதியதற்கு இப்படி ஒரு நல்ல பயனா? அதிர்ஸ்டம்என்பதும் தக்க தருணம் என்பதும் எதிர்பாராமல் கதவைத் தட்டும்' என தனக்குள் நினைத்துக் கொண்டான்.

எதிர்பாராமல் நாம் செய்யும் சிலசெயல்கள், பல தீமைகளிலிருந்து மற்றவர்களை காப்பாற்ற உதவும்.

நன்றி

பாப்பா முரசு

---

சாவகச்சேரியில்

## வங்கி ஆவணங்கள் மீட்பு அதிகாரிகள் விஜயம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையினர் இரண்டாவது தடவையாக அண்மையில் சாவகச்சேரிக்குச் சென்று கிளையில் மீட்கப்படாத நிலையில் இருந்த மேலும் சில பொருட்களையும், தளபாடங்களையும் மீட்டெடுத்து வந்துள்ளனர்.

இவர்கள் தம்முடன் மூன்று லொறிகளை எடுத்துச்சென்றிருந்த போதிலும் இரு லொறிகளில் மட்டுமே பொருட்களையும் தளபாடங்களையும் ஏற்றி வந்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இரண்டாவது தடவையாக மீட்டெடுத்த பொருட்கள் யாவும் பருத்தித்துறையில் இறக்கிவைக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது. (க-77)

---

## புரிந்துணர்வுடன் கூடிய செயல் திட்டங்கள் தேவை

### லயன் தியாகராஜா தெரிவிப்பு

(தென்மராட்சி)

லயன்ஸ் கழகங்களின் செயல் திட்டங்கள் காலத்துக்கு ஏற்றவையாகவும், மக்களது உண்மையான பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டவையாகவும் இருத்தல் வேண்டும். செயல் திட்டங்களில் புதிய அணுகுமுறைகள் அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். இவற்றைப் புறந்தள்ளி பழைய பாணியிலான நோக்கங்களைக் கொண்ட செயல் திட்டங்களையே தொடர்ந்து செய்துவருதலை லயன்ஸ்கழகங்கள் தவிர்த்துக் கொள்ள வேண்டிய காலம் உருவாகியுள்ளது. எனவே வடபகுதியிலுள்ள லயன்ஸ் கழகங்கள் புதிய பார்வையை ஏற்படுத்தும் செயல் திட்டங்களை இனிமேல் அமுல் செய்தல் வேண்டும்.

இவ்வாறு சர்வதேச லயன்ஸ் கழகங்களின் 306 பி மாவட்டத்தின் வடபிராந்தியத் தலைவரான லயன்ஸ் டாக்டர்.வி.தியாகரா ஜா ஜே.பி சாவகச்சேரி லயன்ஸ் கழகம் மானிப்பாயில்ஏற்பாடுசெய்த பிராந்தியத்தலைவர் வருகை தொடர்பான நிகழ்வில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

சாவகச்சேரிலயன்ஸ் கழகத் தலைவர். லயன்ஸ் கே. சற்குணதேவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிராந்தியத் தலைவர் தொடர்ந்து பேசுகையில்,

இன்றைய காலகட்டத்தில் இடம் பெற்ற இடம் பெயர்வுகள் காரணமாக இடம்பெயர்ந்த குடும்பங்கள் பல்வேறு பிரச்சினைகளை எதிர் கொண்டு வாழ்கின்றன. ஆயினும் நொந்த குடும்பங்களின் துயர் துடைப்புப் பணிகளில் கழகங்கள் எவ்வளவு தூரம் பங்களிப்புச் செய்துள்ளன என நோக்கும் வேளையில், அது மிகமிகக் குறைவானதேயாகும் என்பதை யாவரும் ஒப்புக்கொள்வார்கள். இந்த நிலையை நாம் எதிர்காலத்தில் மாற்றிக்கொள்ள வேண்டும்.சர்வதேசத் தலைமையும் இதே நோக்கில்தான் இன்று சிந்திக்க ஆரம்பித்துள்ளது.

மேலும் லயன்ஸ் கழகங்களினால் அமுல் செய்யப்பட்ட செயல் திட்டங்கள் மூலம் அடிமட்ட மக்கள் எவ்வளவு தூரம் பயன் அடைந்துள்ளனர் என்பதை மதிப்பீடுகள் செய்வதன் மூலம் அறிந்து கொள்ளவேண்டும்.நாம்செய்யும் திட்டங்கள் அர்த்த புஷ்டியுள்ளவைகளாக இருத்தல் மிகவும் அத்தியாவசியமானதாகும் எனக்குறிப்பிட்டார். (க-77)

---

பண்டாரவளை சம்பவத்தையடுத்து

# உருவான பதற்ற நிலையானது பல ஊகங்களை ஏற்படுத்துகிறது

### இ. தொ. கா. செயலர் தெரிவிப்பு

(கொழும்பு)

பண்டாரவளை புனர்வாழ்வு முகாமில் நிகழ்ந்த சம்பவத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரங்களை நோக்கும் போது இனவெறியைத் தூண்டும் முகமாக எண்ணெய் ஊற்றுவதா? அல்லது சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக தண்ணீர் ஊற்றுவதா?என்ற கேள்வி எம் முன் எழுகின்றது.

இவ்வாறு இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்குலிச் சங்கப் பொதுச் செயலாளர் ஏ.ஓ.ராமையா செய்தி ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவா மேலும் தெரிவிக்கையில்; தமிழ், சிங்கள மக்களிடையே இனவாதத்தைத் தூண்டும் சில தீய சக்திகள் இன்று நேற்றல்ல பல தசாப்தங்களாகச் செயற்பட்டுவருகின்றன.

இனவாதத்தையே அரசியலாகக் கொண்டு தமது அதிகாரத்தை வென்றெடுப்பதற்காக-நிலை நிறுத்துவதற்காகவே இத் தீய சக்திகள் இவ்வாறு இனவாதத்தைத் தூண்டுபவையாகச் செயற்படுகின்றன.

இச் சம்பவத்தின் பின்னணியில் உள்ள உண்மை நிலைப்பாட்டை பொதுமக்களுக்கு பூரணமாக அம்பலப்படுத்த வேண்டும்.

அத்துடன் பண்டாரவளைச் சம்பவத்தை விசாரித்தறிய ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்ட கமிஷன் தலவாக்கொல்லை சம்பவம் பற்றியும், இது யாரால்? எப்படி? நிகழ்ந்தது என்பது பற்றியும் உண்மை நிலையை வெளிக்கொணர வேண்டும்.

இல்லாவிடில் பல்வேறு வதந்திகளையும் மக்கள் நம்ப வேண்டியேற்படும். (க-செ)

---

மனித உரிமைகள் அலுவலகம்

## விரைவில் பழைய இடத்தில்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகம் மீண்டும் அதே இடத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கையாக துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன.

இவ் அலுவலகம் தற்போது பண்ணாகம் சுழிபுரத்தில் இயங்கி வருவது ஏற்கனவே தெரிந்ததே. (க-12)

---

## விந்துனுவெவ படுகொலை வீரவிதான தொடர்பு?

(கொழும்பு)

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் தமிழ் இளைஞர்கள் மீதான படுகொலைக்கும், சிங்கள வீரவிதான இயக்கத்திற்குமிடையே நெருங்கிய தொடர்புகள் காணப்படுவதாக அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள மேலும் தெரிவிக்கையில் பண்டாரவளை பிரதேசத்தில் பலம்வாய்ந்து விளங்கும் வீரவிதான இயக்கமே தமிழ் இளைஞர்கள் மீதான தாக்குதலுக்கு காரணமாக அமைந்துள்ளது.

அரசாங்கத்தினால் அகற்ற முடியாத விந்துனுவெவ புனர்வாழ்வு முகாமை நாம் அகற்றிக் காட்டுவோமென படுகொலை நிகழ்வதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பு வீரவிதான அமைப்பு தெரிவித்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (க-ந-02)

---

## 55 வது ஆண்டு பூர்த்தியும் பரிசளிப்பும்

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகாவித்தியாலய ஐம்பத்தி ஐந்தாவது ஆண்டு பூர்த்தி விழாவும், பரிசளிப்பு விழாவும் இன்று புதன் கிழமை காலை 9.30 மணிக்கு மேற்படி பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் இவ்விழா பாடசாலையில் அமைந்துள்ள நடராஜர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகளுடன் ஆரம்பமாகவுள்ளது. (செ-75)

---

## சங்கானை பஸ் நிலையம் திருத்தஞ் செய்யப்படுகிறது

(ஈச்சமோட்டை)

சங்கானை மத்திய பேருந்து தரிப்பிட நிலையப் பகுதி திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மழைநீர் தேங்கி நிற்காதவாறு கற்களிட்டு தார் ஊற்றுவதற்காக, கற்கள் பறிக்கப்பட்டுள்ளது.

இப்பேருந்து தரிப்பிட நிலையம் மழைகாலங்களில் வெள்ளநீர் தேங்கி சேறும் சகதியுமாக காணப்படுவதினால் பொதுமக்கள் பிரயாணம் செய்வதற்கு பெருஞ் சிரமத்தினை எதிர்நோக்கி வந்தனர்.

பேருந்து நிலையம் திருத்தம் செய்யப்பட்டதும் இத்தகைய அசௌகரியங்கள் நீங்கும் என பொதுமக்களால் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பகுதியில் பெருமளவு இடம் பெயர்ந்த மக்கள் வசிப்பதனால், இப்பேருந்து நிலையத்தை அதிகளவு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-59)

---

## வருடாந்த மஹோற்சவம்

(ஊர்காவற்றுறை)

அனலைதீவு தெற்கு அருள்மிகு சக்காதி கலட்டி ஸ்ரீ சங்கரநாதர் முருகமூர்த்தி ஆலய வருடாந்த மஹோற்சவம், கடந்த 28-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 5-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும் 6-ம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் இடம் பெறவுள்ளது. (செ-75)

---

## தமிழ் விவகார அமைச்சின் செயலராக ரகுநாதன்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி அபிவிருத்திபுனர்வாழ்வு புனரமைப்பு வடக்கு கிழக்கு தமிழ்விவகாரஅமைச்சின் செயலாளராக ஆ.ரகுநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் தமது கடமையை பொறுப்பேற்றுக் கொண்ட மேற்படி செயலாளர் முன்னர் வடக்கு கிழக்கு மாகாணசபையில் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை மேற்படி அமைச்சு கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இயங்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (க-3)

---

மட்டக்களப்பு-மாந்தீவு

# தொழுநோய் வைத்தியசாலையை மூடிவிட அரசுதரப்பில் முயற்சி?

(கொழும்பு)

மாந்தீவு தொழுநோயாளர் வைத்தியசாலயை மூடிவிட அரசு தீர்மானித்திருப்பதாய் தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நகருக்கு மேற்காக 5 கிலோமீற்றர் தொலைவில் இருக்கும் இத் தொழுநோயாளர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் சிங்கள நோயாளர்கள் தமக்கு அங்கு பாதுகாப்பு இல்லை எனக் கோரியதை அடுத்தே இவ் இடமாற்ற ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடந்த 120 வருடங்களுக்கு முன் பிரிட்டிஷார் ஆட்சிக் காலத்தில் இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது தொழுநோயாளர் வைத்தியசாலையாகிய இவ் வைத்தியாசாலை ஆரம்பிக்கப்பட்ட காலம் முதலே தமிழ்,சிங்கள,முஸ்லிம் இனத்தவர்கள் சிகிச்சை பெற்றும் வருகின்றனர். தற்போது கணிசமானோர் இங்கு சிகிச்சை பெற்று வருகின்றபோதிலும்,சிங்கள இனத்தவரின் கோரிக்கையை ஏற்று வைத்தியசாலையை மூடிவிடத் தீர்மானித்திருப்பது ஒருதலைப்பட்சமான முடிவென பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது இதேவேளை,இவ்மாதம் 20 ஆம் திகதியுடன் இவ் வைத்தியசாலை மூடப்பட்டு இராணுவ முகாமாக மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அறியப்படுகிறது. (உ)

# இராணுவ ஆட்சி முடிவிற்கு வந்தது

# பழைய நிலைக்கு திரும்ப படையினருக்கு பணிப்பு

(லண்டன்)

கடந்த வாரம் ஐவரிக்கோஸ்ற் இராணுவ ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதையடுத்து சகல படை வீரர்களையும் பொலிஸாரையும் தமது நிலைகளுக்குத் திரும்பிவிடுமாறு அந்நாட்டு புதிய அதிபர் லோறன்ஸ் கபாலோ அரசு உத்தரவிட்டுள்ளது.

அத்துடன், கடந்த கிழமை பலத்த இழுபறிகளுக்கு மத்தியில் நடந்தேறிய ஜனாதிபதித் தேர்தலின் போது இடம்பெற்ற தேர்தல் வன்முறைகள் தொடர்பாக சர்வதேச விசாரணைகள் நடத்தவும் புதிய அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

## ஐவரிக்கோஸ்ட்டில் சம்பவம்

இதே வேளை 1999 ஆம் ஆண்டு சதிப்புரட்சி மூலம் ஐவரிக்கோஸ்ற் ஆட்சிப் பொறுப்பை கைப்பற்றிக் கொண்ட றொபேட்கு யின், ஜனநாயகநடைமுறைகளைத் தவிர்த்து இராணுவ நடைமுறைகளைப்பேணிவந்ததும்.

தேர்தல் காலத்தில் இவரின் ஆதரவாளர்கள் மேற்கொண்டவன்முறைகளினால் 50இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு 200இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்ததும் தெரிந்ததே. (உ)

## புதியமாநிலம்

இந்தியாவின் 25 மாநிலங்களில் ஒன்றான மத்திய பிரதேசத்திலிருந்து 'சத்யூகட்ப, எனும் 26 ஆவது புதிய மாநிலம் ஒன்று நேற்று நள்ளிரவு உத்தியோக பூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இம்மாநிலம் சுமார் 1லட்சத்து 35 ஆயிரத்து 194 சதுர கிலோ மீற்றர் நீளமானதுடன், ஒரு கோடியே 176 இலட்சம் சனத்தொகையையும் கொண்டது.

புதிய மாநிலத்தின் முதலாவது முதல்வராக காங்கிரஸின் முன்னாள் செயலாளர் அஜித் ஜோதி பதவியேற்றுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ

# தன்சானியாவில் தேர்தல் மோசடிகள் அளிக்கப்பட்ட வாக்குகள் இரத்து

(லண்டன்)

தன்சானியாவில் கடந்த ஞாயிறன்று இடம்பெற்ற பொதுத் தேர்தலின் போது, மோசடிகள் இடம்பெற்றதாகக் கூறப்படும் தொகுதிகளில் அளிக்கப்பட்ட வாக்குகளை ரத்துச் செய்ய இணக்கம் காணப்பட்டுள்ளது.

14 தொகுதிகளில் இவ்வாறு மோசடிகள் இடம்பெற்றதாகவும், அதற்கான மீள் வாக்கெடுப்பு ஒரு வார காலத்தில் இடம்பெறலாம் எனவும் தெரியவந்துள்ளது.

எனினும், இம் மீள்வாக்கெடுப்பு முயற்சிக்கு எதிர்க் கட்சிகள் மற்றும் பொது நலவாய நாடுகளின் கண்காணிப்பாளர் குழு என்பன கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்துள்ளன.

ஜனாதிபதி மற்றும் 213 நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்காக தன்சானியாவில் தேர்தல் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது. (உ)

# அமெரிக்க-வடகொரிய பேச்சு ஆரம்பம்

(மலேசியா)

ஏவுகணை தொடர்பான அடுத்த கட்ட பேச்சுக்களை அமெரிக்காவும் வடகொரியாவும் நேற்று மலேசியாவில் ஆரம்பித்தனர்.

இந்தப் பேச்சுவார்த்தைகள் எத்தனை நாட்களுக்குத் தொடருமென்பது கூறமுடியாதென்று அறிவிக்கப்படுகிறது.

வர்த்தக ரீதியான நெடுந்தூர ஏவுகணைத் திட்டத்தை வடகொரிய அதிபர் இங்யோஸ் வந்துள்ளார் என்றும் இது பற்றிய தீர்க்கமான முடிவு எடுக்கும் வரை பேச்சுக்கள் தொடருமென்றும் தெரியவருகிறது.

வடகொரிய -அமெரிக்க ஏவுகணைப்பேச்சுகளின் முடிவைப் பொறுத்தே அமெரிக்க அதிபர் பில் கிளிங்டனின் வடகொரிய விஜயம் நிச்சயிக்கப்படுமென்றும் தெரிவிக்கப்படுகின்றது. (து)

# இந்தியாவில் மூளைகாய்ச்சல் பரவுகிறது 19பேர் பலி; பலர் பாதிப்பு

(புதுடில்லி)

இந்தியாவின் தென் மாநிலமான ஆந்திராவில் பரவும் ஜப்பான் மூளைக்காய்ச்சலினால் இவ் வருடம் 19 சிறுவர்கள் பலியாகியுள்ளனர்

ஆந்திர மாநிலத்தின் 9 மாவட்டங்களில் கடுமையாகப் பரவி வரும் இந்நோய் காரணமாக 100 பேர்வரையில் பாதிக்கப்பட்டிருப்பதாக அறியவந்துள்ளது.

கடந்த 20 வருடங்களாக ஆந்திராவைத் தொடர்ந்து தாக்கி வரும் இவ் மூளைக் காய்ச்சலினால் கடந்த வருடம் 230 பேர் பலியாகியுள்ளனர். (உ)

## உலக தரிசனம்

# அமெ. சட்ட முன்வரைவை ஏற்க கியூபா மறுப்பு

(ஹவானா)

கியூபாவுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்புவதற்கு அமெரிக்கா வெளியிட்ட சட்ட முன்வரைவுகளை கியூபா மறுத்துள்ளது.

கியூபாவின் நாடாளுமன்றத் துணைத்தலைவர் இதனை அறிவித்தார்.

அமெரிக்காவின் இந்தச் சட்ட முன்வரைவு கியூபாக்கு எந்த வித நன்மையும் வரப் போவதுமில்லை என்று தெரிவித்தார்.

இரண்டாயிரமாண்டு ஹவானா பன்னாட்டு பொருட்காட்சி தொடக்க விழாவில் உரை நிகழ்த்துகையில், அமெரிக்க சட்ட முன் வரைவு கடுமையான கட்டுப்பாடுகளைக் கொண்டது என்றும் மற்றும் முன் நிபந்தனைகளைக் கொண்டது என்றும் கியூபாவின் வர்த்தக நடைமுறைக்கு முற்றிலும் மாறுபட்டது என்றும் தெரிவித்தார். (து)

# கார்க்குண்டு வெடிப்பு

(பர்ஸலோனா)

ஸ்பெயின் தலைநகர் பர்ஸலோனாவில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்புச் சம்பவத்தில் மூவர் கொல்லப்பட்டும், 10 பேர் படுகாயமடைந்துமுள்ளனர்.

இச்சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு அருகில் இருந்த 30 இற்கும் மேற்பட்ட வாகனங்கள் எரிந்து நாசமாகியிருப்பதுடன், கட்டடங்கள் பலத்த சேதத்திற்குள்ளாகி இருப்பதாகவும் அறியமுடிகிறது. (உ)

# பண்டாரவளை படுகொலை காட்டுமிராண்டித் தனமானது

## புதிய தமிழகம் கட்சித் தலைவர் தெரிவிப்பு

(புதுடில்லி)

பண்டாரவளை பிந்துனுவெவ இளைஞர் நலன்புரி நிலையத்தில் இடம் பெற்ற படுகொலை நாகரிகமற்ற காட்டுமிராண்டித் தனமான வர்களது செயல்.

இவ்வாறு புதிய தமிழகம் கட்சித்தலைவர் டாக்டர் குப்புசாமி கடந்த திங்களன்று விடுத்த அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிங்கள இனவாதிகளுக்கு, தமிழர் மேல் வன்முறைகளைக் கட்டவிழ்த்து விடுவதும், படுகொலைகளைப் புரிவதும் ஒன்றும் புதிதான செயலல்ல. இதுஇலங்கையில் காலம் காலமாக நடந்து வருகிறது.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் தமிழரைக் காப்பாற்ற முடியாது என்பதை தமிழக அரசியல் வாதிகள் பலரும் புரிந்து கொள்ள வேண்டும் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# இந்தியா குறைந்த அணுச்சக்தியில் நவீன ஆயுதங்களை வெளியிடும்

## தலைவர் நம்பிக்கை

(புதுடில்லி)

மிகக் குறைந்த அணு சக்தியுடனே அதி நவீன ரக ஆயுதங்களைத் தயாரிக்கும் வல்லமை பெற்றுவிட்டோம் என்று இந்திய அணுவாயுதத் தலைவர் ஆர். சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

அணு ஆயுத ஆய்வுத்துறை விஞ்ஞானிகள் மற்றும் துறை சார்ந்தவர்கள் மத்தியில் உரையாற்றுகையில்; இந்தியா குறைந்த வெளியீடுகளாகச் சிறந்த ஆயுதங்களை விஞ்ஞான மதிநுட்பத்தால் உற்பத்தி செய்யக் கற்றுக் கொண்டுள்ளது என்றார்.

அதேவேளை 1995 ஆம் ஆண்டு அணுக்குண்டு சோதனைக்குப் பிறகு அணுசம்பந்தமான ஆய்வுகள் உச்சக் கட்ட நிறைவைக் கண்டுள்ளோம் பிரதமர் கூறியது போல இந்தியா ஒரு அணு ஆயுத நாடு என்ற நிலைக்கு வளர்ந்துள்ளது என்று தெரிவித்தார். (து)

# கனடாவில் விளையாட்டு விழா

(ஒட்டாவா)

கனடாவிலுள்ள சுன்னாகம்மக்கள் ஒன்றியத்தினால் ரொறன்ரோ நகரில் மிகவும் கோலாகலமாக விளையாட்டு விழா ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது.

கனடா- சுன்னாக மக்கள் ஒன்றியத் தலைவர் ஆசிரியர் அ.தம்பித்துரையின் தலைமையில் நடைபெற்ற இவ் விளையாட்டு விழாவில் ஈழத்துத் தமிழ்மக்கள் பலரும், கனடா வாழ் மக்களும் பார்வையாளராகக் கலந்து கொண்டனர். (து)

# ஆன்மீக தலைவரின் விஜயத்திற்கு தென்கொரிய அரசு மறுப்பு

(சோல்)

ஆன்மீகத் தலைவர் தலாய் லாமா தென்கொரியாவுக்கு பயணம் மேற்கொள்வதற்கு அந்நாட்டரசு அனுமதி மறுத்துள்ளது.

தென்கொரிய பௌத்த சங்கங்களின் அழைப்பை ஏற்று, ஆன்மீகத் தலைவர் இம்மாதம் அங்கு செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவந்த சமயமே தென்கொரிய அரசின் இவ் அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இவ்வருடம் பயணம் மேற்கொள்வது தலாய்லாமாவின் பாதுகாப்புக்குப் பொருத்தமானதல்ல என்கின்ற காரணத்தினாலேயே அனுமதி மறுக்கப்பட்டிருப்பதாக தென்கொரிய வெளிநாட்டமைச்சின் குரல்தரவல்ல அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

சீனாவுடன் ராஜதந்திர உறவுகளைப் பேணிவரும் தென்கொரிய அரசு' தலாய் லாமாவின் பயணத்தால் அதனுடன் பகைமை உணர்வினை வளர்க்க விரும்பாமையினாலேயே இத்தடை விதிக்கப்பட்டிருப்பதாக அரசியல் நோக்குநர்கள் தெரிவித்துள்ளனர்.

இவ்வருடத்தின் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற தென்கொரிய ஜனாதிபதி கிங் டேயுங் தலைமையிலான அரசு, ஏற்கனவே சமாதான நோபல் பரிசு பெற்ற ஆன்மீகத் தலைவர் தலாய்லாமாவின் வருகைக்கு தடை விதித்திருப்பது வியப்புக்குரியது எனவும் நோக்குநர்கள் மேலும் கருத்து வெளியிட்டுள்ளனர். (உ)

# பிலிப். எதிர்க் கட்சித் தலைவர் உயர் பதவி ஏற்க மறுக்கிறார்

(மணிலா)

பிலிப்பைன்ஸ் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் லொறியா அறயோ விற்கு அதிபர் கொடுத்த முக்கிய பதவியை ஏற்க மறுத்து விட்டார்.

அதிபர் எஸ்ராடா எதிர்க் கட்சித் தலைவரும் முன்னாள் துணை அதிபருமாக இருந்த திருமதி லொறியா அறயோவை நாட்டின் முக்கிய பொருளாதாரத் துறைப் பொறுப்பை ஏற்க வருமாறு அழைத்திருந்தார். அதனை லொறியா ஏற்க சம்மதிக்கவில்லை.

அதேவேளை தேசிய பாதுகாப்பு மன்றத்துக்கும் வந்து பொறுப்புகளை ஏற்குமாறும் அதிபர் எஸ்ராடா அழைப்பு விடுத்திருந்தார். அதனையும் முன்னாள் துணை அதிபரான லொறியா ஏற்கவில்லை.

பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ராடா சூதாட்டக் காரரிடம் பல கோடி டொலர் இலஞ்சம் வாங்கியதாகக் குற்றம் சாட்ட ஓரிரு தினங்களுக்கு முன்னரே துணை அதிபர் பதவியிலிருந்து லொறியா விலகியதும் இப்பொழுது பதவி ஏற்கமறுப்பதும் குறிப்பிடத்தக்கது. (து)

குடிப்பாரை இல்லாத ஏமார மன்னன்
கெடுப்பார் குலனுங் கொடு.
- குறள்

# வலம்புரி

## வன்முறையின் பரிசு தேசிய அரசு?

மலையகத்தில் வன்முறைச் சம்பவங்கள் ஆங்காங்கே வெடித்துள்ளது. அப்பாவித் தமிழ்மக்கள் நால்வரின் உயிர் பறிக்கப்பட்டது. கடைகள் எரிக்கப்பட்டன. பதட்டம் பரவுகின்றது. இவையெல்லாம்பண்டாரவளைப்படுகொலையை தொடர்ந்து நடந்த சம்பவங்கள். பண்டாரவளைச் சம்பவத்திற்கு ஐக்கியதேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. ஏதோ தமக்குமொரு கடமைப்பாடு உண்டென்ற வகையில் உடன் 'விசாரணைவேண்டுமென்ற' அளவில் தனது அறிக்கையைத் தயாரித்துக்கொண்டார், எனினும் பண்டாரவளைச் சம்பவத்தைப் பயன்படுத்தியாவது தேசிய அரசாங்கமொன்றையமைத்துவிட வேண்டுமென்பதில் ரணில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார் என்பது மட்டும் உண்மை.

அவரின் தேசியஅரசாங்க அமைப்பின் ஆர்வத்திற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியின் முக்கிய புள்ளியும், பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கா உடந்தை என்பதை மறுப்பதற்கில்லை. இவ்விரண்டு பேரும் தேசிய அரசாங்கமொன்றை அமைத்து இலங்கையில்சிறுபான்மையினருக்குப் பாடம் புகட்டத் திடசங்கற்பம் பூண்டுவிட்டனர்.

அதற்கு நல்லதொரு வாய்ப்பாக மலையகத்தில் இடம்பெற்ற வன்முறைகளும் மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரத்தின் கைதும் அமைந்தது. மலையகத்தின் வன்முறைகள் குறித்துக் கூட்டாக ஆராயப்படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் பிரதமரிடம்கோரிக்கைவிட்டார் காலம் பார்த்திருந்த பிரதமரும் அக்கோரிக்கையை பூரணமாகஏற்றுக்கொண்டதுடன், மலையகத்தில் வன்முறையை நிறுத்துவதற்கு பொதுஜன ஐக்கிய முன்னணியும், ஐக்கிய தேசியக்கட்சியும் இணைந்துகூட்டாகக் கோரிக்கை விடவும் இணங்கியுள்ளன. பண்டாரவளை படுகொலையைக் கூட்டாக இணைந்து ஆராயமுடியாத இரு பிரதான கட்சிகளும், மலையக வன்முறைகளை வாய்ப்பாக வைத்து தேசிய அரசை உருவாக்கும் முயற்சியில் இறங்கியுள்ளன. ஒட்டுமொத்தத்தில் மலையக வன்முறையின் பரிசாக தேசிய அரசு மலர்ந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

# இக, பர நலன்களை அடியார்க்கு நல்கும்!

# கந்த சஷ்டி விரத அனுஷ்டான மகிமை



உலகத்திலே சிறந்த செல்வம் படைத்தவர் சிலரும், வறுமையில் கிடந்து வாடுகின்றவர் பலருமாக இருக்கின்றனர். இதற்கு என்ன காரணம்? செல்வம் படைத்தவர்களை நாம் ''கொடுத்து வைத்தவர்கள்'' என்று கூறுவோம். அவர்கள் என்னத்தை செய்து கொடுத்துவைத்தவர்கள் என்பதைச் சற்று சிந்திப்போம்.

இறைவனை நினைந்து நல்ல விரதங்களை நோற்றவர் சிலர், விரதங்களை நோற்காதவர் பலர் முற்பிறப்பில் நல்ல விரதமிருந்து இறைவனை வழிபட்டவர்கள், இப்பிறப்பில் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வில் வாழ்பவர்கள் அல்லாதவர் துன்பத்தில் ஆழ்ந்து அல்லல்படுவர்.

''இலர் பலர் ஆகிய
காரணம் நோற்பார்
சிலர் பலர் நோலாதவர்
என்று தெய்வப்புலவராகிய திருவள்ளுவர் கூறியுள்ளார்.

### கந்தனின் விரதங்கள்

மிகச் சிறந்த பிறப்பாகிய மனிதப் பிறவியைத் தந்த இறைவனை குறித்து விரதங்களிலிருந்து வேண்டுதல் வேண்டும், இலகுவில் அருள் புரியக்கூடிய மூர்த்தி கலியுக வரதராகிய கந்தக் கடவுள். தேவசேனாதிபதி, தேவாதி தேவர்களுக்கெல்லாம் தலையாய தனிப்பெருந் தலைவர் முருகப் பெருமானை நினைந்து நல்விரதங்களையாற்றி வழிபாடுசெய்தோர் எல்லா நலன்களையும் எளிதிற் பெறுவர். முருகவேலுடைய விரதங்களிலுள் தலையாய விரதம் 'கந்த சஷ்டி விரதம்' ஆகும்.

சிவபெருமானின் விரதங்கள் எட்டு. அவற்றில் தலையாயது சோமவார விரதம். விநாயகருக்கு உரிய விரதங்களில் ஆவணிச்சதுர்த்தி மிகச் சிறந்ததாகும்.

### கந்த சஷ்டி

ஐப்பசி மாதம் வளர்பிறை பிரதமையிலிருந்து கந்தசஷ்டி விரதம் தொடங்கவேண்டும். ஆறாவது நாள் சஷ்டியன்று பூர்த்தி செய்தல் வேண்டும். மறுநாள் சப்தமி திதியாகும். ஏழாவது நாள் காலை ஆறு மணிக்கு அதாவது இளவெய்யிலின் யோதேபாரணைசெய்தல் வேண்டும். அதாவது ஆறு அடியார்களுக்கு அன்னம் வழங்கி உணவு கொள்ள வேண்டும்.

காரை

**பிரம்மஸ்ரீ கு. சிவராஜசர்மா**

அதாவது, பிரதமையிலிருந்து (அமாவாசை வந்த 2ம் நாள்) கந்தசஷ்டி விரதம் தொடங்க வேண்டும். பிரதமையன்று அதிகாலை எழுந்து நதியாயின்நீரின்எதிர் முகமாக நின்றும் கிணறு குளங்களாயின் வட திசை நோக்கி நின்றும் தண்ணீரில் அறுகோணம் வரைந்து, அதில் சடாக்கிரமந்திரத்தை (ஓம் சரவண பவாய நம) எழுதிஇடையேபிரணவத்தை பாவனை புரிந்து அதில் முழுக வேண்டும்.

பின்னர்கரைஏறிதோய்த்து உலர்ந்த தூய ஆடைகளையுடுத்தி அனுஷ்டானம் புரிந்து முருகனுடைய திருக்கோயில்களுக்கு சென்று மலர் இட்டு விதிப்படி வலம் வந்து, திருப்புகழ். திருமுருகாற்றுப்படை, கந்தர் கலிவெண்பா, கந்தர் அனுபூதி, கந்த சஷ்டி ஆறு கவசம் இவைகளை ஓதி, உள்ளம் உருகி, ஒருமனதுடன் வழிபடவேண்டும்.

### ஆறாவது நாள் அனுஷ்டானம்

இவ்வாறு 5 தினங்கள் நோற்றபின் ஆறாவது நாள் சஷ்டியன்றுநீராடி சிறப்பான ஜப, தவங்களைச் செய்ய வேண்டும், அதிகபாராயணம் செய்தல் வேண்டும். அன்று இரவு உறங்காது ஆறு காலங்களில் முருகன் திரு உருவத்திற்கு ஆயிரத்தெட்டு மந்திரங்களினால் அர்ச்சனை புரிய வேண்டும். மறுநாள் சப்தமி திதியன்று, நீராடி வழிபாடு முடிந்தபின் ஆறு அடியவர்களுக்கு அன்னம். வழங்கி உணவு கொள்ள வேண்டும் அன்று பகலில் உறங்கக் கூடாது.

ஆறு நாட்களிலும் பூரண உபவாசம் இருக்க முடியாதவர்கள் ஐந்து நாட்கள் பால்பழம் உண்டுசஷ்டியன்று முழு உபவாசமாக இருத்தல் வேண்டும். இதுவும் மாட்டாதவர்கள். ஐந்து நாட்கள் உச்சி வேளையில் இறைவனுக்கு நிவேதித்த உணவை உண்டு இரவு பட்டினியாக இருந்து ஆறாவது நாள் மிகவும் அன்புடன் உபவாசமாக இருந்து வழிபட வேண்டும். ஐந்து நாட்களும் படுக்கையில் படுக்கக்கூடாது. மண் நிலத்தை சாணகத்தால் மெழுகி அதன் மேல் படுத்தல் வேண்டும். அல்லது தூய பட்டு விரித்து அதன் மீது படுத்து இதயத்தில் முருகனை நிறுத்தி அககண்ணால் நோக்கி தியானித்த வண்ணமாக உறங்கவேண்டும்.

### கந்தபுராணக் கதை

தேவர்கள் துயரம் தீர்த்தற் பொருட்டு சுப்பிரமணியப் பெருமான் சூரனுடன் போர் தொடங்கி ஆறாவது நாள் தமது வேலாயுதத்தால் பிந்ளது கொன்றார். பிளவுபட்ட சூரனன் உடல் பாதி மயிலாகவும் மறுபாதி சேவலாகவும் தோன்றியது. அவற்றை வாகனமாகவும், கொடியாகவும் கொண்டருளினான்.

இவ் ஆறு தினங்களும் உபவாசம் இருந்து முருகன் புகழ் மாலையைப் பாராயணம் செய்து முறைப்படி விரதம் அனுட்டிப்பவர்கள் முருகன் அருள் பெறுவர்.

ஐப்பசி மாதம் சுக்கில பட்சம் சஷ்டி திதியன்று முருகப்பெருமான் சூரனை வதைத்ததிருநாள். ஆறுமுகப் பெருமானின் ஆலயங்களில் எல்லாம் இத்திருநாள் சிறப்பாக கொண்டாடப்படும்.

### கந்த விரத பலன்

உரிய காலத்தில் செய்கின்ற கருமங்கள் ஒன்றுக் ஆயிரமாக பெருகி நன்மை செய்யும். 'பருவத்தே பயிர்செய்' என்ற முதுமொழியை நினைவு கூர்க. புண்ணிய தினங்களில் செய்கின்ற பாராயணம், தியானம், தானதர்மம் என்பவற்றிற்கு நிரம்பவும் பலன் உண்டு. ஒன்றுக்கு பத்தாக விளையும் என்று பெரியோர் கூறுவர்.

கந்த சஷ்டி விரதத்தைக் கைக் கொள்ளும் பொழுது உடலில் அதிக மாற்றங்களை அவதானிக்கலாம் உடலில் உள்ள அழுக்குகள் நீங்கும், ஜீரண உறுப்புகள் பலம் பெறும், உடலில் இருக்கின்ற நச்சு நீர் மறைந்து விடும், உடல் எடை குறையும், கொழுப்பு கரையும், உடலில் உள்ள சளித்தன்மை நீங்கும், உடலிலுள்ள வேண்டாத தசை கரைந்துவிடும். இதனால் உடல் அழகு பெறும். இளமைநீடிக்கும், மூளை புதிய வேகத்துடன் செயல் படும். சிந்தனைத் தெளிவு உண்டாகும். என்று தற்கால விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்

இவ்வாறு சஷ்டி விரதம் இருப்போர் மகப்பேறு முதலிய எல்லா நன்மைகளையும் எளிதில் பெறுவர்.

விரதகாலத்தில்பால், பழம் அருந்துவது மரபு சித்த ஆயுள் வேத மருத்துவர்கள் பால் வயிற்றுப் புண்ணைக் குணமாக்கும். மருந்து என்று கூறுகின்றார்கள். அல்சர் என்கின்ற குடல் புண் உள்ளவர்கள் கூட கந்த சஷ்டி விரதம் இருக்கலாம். ஆனால் அவர்கள் காலை, மத்தியானம், இரவு போதிய பால் அருந்துதல்வேண்டும். அப்படிஇருக்

(2ம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கில் தொடரும் கொடிய யுத்தம்

# சைவத்தையும்; தமிழையும் அழித்தே விடும்

## உடுவில் பிரதேச செயலர் தெரிவிப்பு

(தென்மராட்சி)

எங்களுடைய மொழிக்கும் சைவத்துக்கும் ஏற்படுகின்ற துன்பங்களையும் களங்கங்களையும் நாம் களைய முற்பட வேண்டும். இந்த நாட்டில் இடம்பெற்று வருகின்ற யுத்தம் காரணமாகஆயிரத்துக்கு மேற்பட்ட இந்து ஆலயங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. அவற்றின் இடிபாடுகளைத்தான் இன்னமும் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இக் கொடிய போர் எங்களுடைய மொழியையும்சைவத்தையும்அழித்துவிடப் போகின்றது. ஆனால் சைவர்களாகிய நாம் இதனை இனியும் கைகட்டிக் கொண்டு பார்த்துவிட முடியாது. உரிய நடவடிக்கைகளை நாம் எடுத்தாக வேண்டும். இந்த நெருக்கடி மிக்க நிலையில் கந்த புராண வசன காவியத்தை வெளியீடு செய்வது கால மறிந்த செயலாகும்.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்து சமயப் பேரவையினால் யாழ். சத்திரம் ஞானவையிரவர் தேவஸ்தான முன்றலில் நடைபெற்ற இந்து சமயப் பேரவையின் தலைவர் அருட்கவி.சி. விநாசித்தம்பியினால் யாத்த கந்தபுராண வசன காவியம் வெளியீட்டு விழாவில் தலைமையுரை நிகழ்த்திய உடுவில் பிரதேச செயலரும் இந்துசமயப் பேரவையின் துணைத் தலைவருமாகிய ஆ. மகாலிங்கம் தனது தலைமையுரையில் குறிப்பிட்டார்.

இவ் வெளியீட்டுவிழாவிற்கு முன்னர் கந்த புராண வசன காவியப் பிரதிகள், யாழ்ப்பாணம் வண்ணை சிவன் கோவிலில் இருந்து இந்து சமயப் பேரவையினர், யாழ். மேலதிக மாவட்ட அரச அதிபர் து. வைத்திலிங்கம், ஓய்வுபெற்றமாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு உட்பட பெருந்தொகையானோர் பங்குகொண்ட ஊர்வலம் மேளதாள நாதஸ்வரஇசையுடன் பக்தி பூர்வமாக எடுத்து வரப்பட்டன.

தலைவர் தமது தலைமையுரையின் போது உலகத்திலே எங்கு சைவத்துக்கு அநீதி இழைக்கப்படுகின்ற நிலை ஏற்படுகின்றதோ அங்கு நாம் குரல் கொடுப் போம். எம்பிரதேசத்தில் இன்னமும் பூட்டப்பட்ட நிலையில் பல கோவில்கள் திறக்கப்படாமல் இருப்பதால் சமய சடங்குகள் தொடர்பான பூஜைகள் மேற்கொள்ளப்படவில்லை. அவை பற்றி நாம் தொடர் நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

ஆசியுரை வழங்கிய நல்லை ஆதினமுதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கந்த புராண நூல் வசன நடையில் வெளியிடுவதன் மூலம் தமிழ் மக்கள் மத்தியில் புதிய சிந்தனைகள் உருவாக வாய்ப்பு ஏற்படும். கந்தபுராணக் கலாசாரம் யாழ்ப்பாணத்தில் ஏற்படவேண்டும். எமது மக்கள் துன்பப்பட்டு இருக்கும் போது துன்பத்துக்குவழி சமைக்க வேண்டும். நாம் நன்றாகப் பேசுகின்றோம் நன்றாக எழுதுகின்றோம், ஆனால் நாம் சொல்வது எழுதுவது போல் யாரும் நடப்பதில்லை எனக் கூறினார்.

வாழ்த்துரை வழங்கிய ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு அங்கு குறிப்பிடுகையில்; இன்று இந்தக் காலத்தில் வாழ்கின்ற நாம் சைவ மாண்பினை மறந்துவிட்டோம். எமது பண்பாட்டை கலாசாரத்தை மறந்து வாழ்கின்றோம். நாம் இறைபக்தியுடன் வாழவேண்டும் சிவசிந்தனையுடன் எவரும் வாழ்வதாகத்தெரியவில்லை. யாழ்ப்பாண மக்கள் சோகம் தழும்ப வாழ்கின்றார்கள். அவர்களின் சோகத்தினைப் போக்க நாம் எம்மாலான முயற்சிகளை எடுக்க வேண்டும் எனக் கூறினார்.

இந்து சமயப் பேரவையின் கௌரவ செயலாளர் எஸ். சக்திகிரீவனும் வாழ்த்துரை வழங்கினார். (க-77)

யாழ்ப்பாணம்

# கிழக்கு பல்கலைகழகத்தில் மறியல் போராட்டம்

மட்டக்களப்பு வந்தாறு மூலை கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நேற்றுக் காலை மறியல் போராட்டமொன்று நடத்தப்பட்டது.

கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் ஊழியர்கள் இம் மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

★ பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வு முகாம் படுகொலையினைக் கண்டித்தும்

★ யாழ்ப்பாண செய்தியாளர் நிமலராஜன் கொலையினைக் கண்டித்தும்

★ மற்றும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ள பி.சந்திரசேகரம் எம்.பி யை விடுதலை செய்யக் கோரியும் இந்த மறியல் போராட்டம் நடைபெற்றது.

மறியல் போராட்டத்தின் போது பல்கலைக் கழகமாணவர்களும் ஊழியர்களும் எதிர்ப்பு சுலோகங்களை ஏந்தி நின்றனர். இதனால் மட்டக்களப்பு - வாழைச்சேனை பிரதான வீதிப் போக்குவரத்து சுமார் ஒரு மணி நேரம் தடைப்பட்டிருந்ததாக எமது ஏறாவூர் செய்தியாளர் அறிவிக்கிறார். (வ)

# கல்விமாணிதெரிவுபரீட்சை யாழில் நடைபெறும்

தேசியக் கல்வி நிறுவனத்தால் நடாத்தப்படும் கல்விமாணிக் கற்கை நெறிக்கான புதுமுகத் தேர்வுப் பரீட்சை எதிர்வரும்18ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின செயலாளர்நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தேசியகல்விநிறுவனப் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணவர்த்தனாவிடம் இது குறித்துதொடர்பு கொண்டதையடுத்தே இப் பரீட்சையை இங்கு நடத்துவதற்குமுடிவு செய்யப்பட்டது.

இப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு 2001 ம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி கற்கை நெறி ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஸ்ரீ)

## கூடைப் பந்தாட்ட போட்டி

(யாழ்ப்பாணம்)

ஹற்றன் நஷனல் வங்கியின் யாழ் கிளை நடாத்தும் எச்.என்.பி. வெற்றிக் கேடயத்திற்கான கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகிறது.

யாழ். மத்திய கல்லூரியின் ஆண்கள் அணிக்கும் பரியோவான் கல்லூரியின் ஆண்கள் அணிக்குமிடையே பிற்பகல் 3 30 மணிக்கு முதலாவது போட்டி ஆரம்பமாகிறது.

பெண்களுக்கிடையிலான போட்டியில் ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து வேம்படி (சறுப்பு) அணி மாலை 4.15 மணிக்குமோதும் தொடர்ந்து மாலை 5 மணிக்கு கழகங்களுக்கிடையிலான போட்டியில ஜொலிஸ்ரார் அணியை எதிர்த்து கொக்குவில் சீ.சீ.சி. அணியும் மோதவுள்ளது. (வ ஸ்ரீ)

### படத்தில்

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, தான் பார்த்த ஹிந்திப் படத்தில் வரும்''கழுத்தில் கயிற்றினால் இறுக்கி உயிர்துறக்கும் காட்சியை'' நடித்துக்காட்டுவதாக முற்றத்திலிருந்த பெற்றோரிடம் கூறிவிட்டு வீட்டுக்குள் சென்ற இச் சிறுவன் சுமார் 2 மணித்தியாலங்களாகவெளியில் வராததால் உள்ளே சென்று பார்த்தபோது சிறுவன் சயிற்றில் தொங்கிக் கொண்டிருந்ததாகவும் உடனடியாக வைத்திய சாலைக்கு கொண்டு சென்றபோது இடையில் உயிரிழந்ததாகவும் தெரியவருகிறது. (ஸ்ரீ)

### காயமடைந்த..

னால் ஆஜராக்குமாறு நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டிருப்பதாகவும், இவ் இளைஞர்கள் விடயத்தில் நல்ல முடிவு எடுக்கப்பட வேண்டுமென்றும் பட்டிவீரக்கோன் தெரிவித்துள்ளார். (வ)

ஆனந்தசங்கரி

# இந்தியாவில்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவரும் எம்.பியுமான வீ.ஆனந்தசங்கரி மற்றும் மாவை சேனாதிராஜா எம்.பி ஆகியோர் தனிப்பட்ட விஜயமொன்றை மேற்கொண்டு இந்தியாசென்றுள்ளார்கள்

இந்தியா சென்றுள்ள இவர்கள் அங்கு தங்கியுள்ள கூட்டணித்தலைவர் மு.சிவசிதம்பரத்தைச்சந்தித்து இலங்கையின் நடப்பு அரசியல் விவகாரம் குறித்து ஆராயவுள்ளார்கள் என்று கூட்டணி வட்டாரங்கள் தெரிவித்தன. (வ)

''மிக்'' விமானங்கள்

# தாக்குதல்

(கொழும்பு)

திருமலை மாவட்டத்தின் உப்பாறு, பள்ளிக்குடியிருப்பு சம்பூர்ப் பகுதிகளில் நேற்று விமானப் படையின் ''மிக்'' விமானங்கள் குண்டுவீச்சுத்தாக்குதலை நடத்தியுள்ளன.

இராணுவத்தினர் வழங்கிய தகவலினடிப்படையிலேயே நடந்தப்பட்டதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

# பண்டாரவளை படுகொலையை கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

பண்டாரவளை படுகொலைச்சம்பவத்தை கண்டித்து புதிய இடது சாரிமுன்னணி தலைமையில் நேற்று மாலை கொழும்பு கோட்டைப் புகையிரத நிலையம் முன்பாகஆர்ப்பாட்டம் இடம் பெற்றுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தில்முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி, மனித உரிமைகள்நடவடிக்கை குழு, அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம், சேரிவாழ் முன்னணி, இலங்கை ஆசிரியர் சம்மேளனம், ஐக்கிய மீனவ மீன்பிடி தொழில் தேசிய சம்மேளனம் உட்பட பல அமைப்புக்கள் இதில் கலந்து கொண்டன.

இவ் ஆர்ப்பாட்டத்தில் படுகொலை தொடர்பா விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் இதில் சம்பந்தப்பட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டுமென்றும் கைது செய்யப்பட்ட சந்திரசேகரன் விடுதலை செய்யப்பட வேண்டுமென்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. (ந-5)

### 1983ஜூலை..

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

பண்டாரவளை புனர் வாழ்வு நிலையத்தில் இடம் பெற்ற படுகொலைகள் குறித்து உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இப் படுகொலையின் பின்னணியில் யார் இருந்தாலும் அவர்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

பண்டாரவளையில் தமிழ் இளைஞர்கள் படுகொலை செய்யப்பட்டதைப் பயன்படுத்தி இனக் கலவரத்தை ஏற்படுத்தி அரசியல் இலாபம் தேடுவதற்கு எவரையும் அனுமதிக்க மாட்டோம். இந்த நாட்டில் மீண்டுமொரு இனக் கலவரத்தைத் தூண்ட சில தீய சக்திகள் முனைந்து வருகின்றன. இதற்கு நாம் ஒரு போதும் அனுமதி அளிக்கப் போதில்லை.

பல உயிர்களைக் காவு கொண்டு நீண்டு செல்லும் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவுள்ளோம்.

தமிழ் மக்களுக்கு இருக்கும் பிரச்சனைகளை அரசு மறந்து விடவில்லைஅப்பிரச்சனையை தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாம் எடுத்து வருகிறோம், என்றும் ஜனாபதிசந்திரிகா தனதுவானொலி உரையின் போது குறிப்பிட்டுள்ளார். (வ)

### சந்திரசேகரன்..

அதிகாலை கைது செய்யப்பட்ட சந்திரசேகரனுக்கு சாரம் கொடுப்பதற்கு நேற்றைய தினம் தான் அனுமதி வழங்கப்பட்டது.

இதே வேளை கைது செய்யப்பட்ட சந்திரசேகரனுக்கு அவசர காலச் சட்டத்தின் கீழ் ஏழு நாட்கள் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (வ)

## திகதி மாற்றம்

மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினால் தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் க.பொ.த [சா/த] மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சை முன்னாயத்த வகுப்புக்கள் இம் மாதம் 26 ஆம் திகதி வழமையான நிலையங்களில் வழமைபோல் நடைபெறவுளளதாக தென்மராட்சி வலயக் பிரதி கல்விப் பணிப்பாளர் கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த வகுப்புக்கள் எதிர் வரும் 5 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்தமை தெரிந்ததே. (ஸ்ரீ)

### யாழ் நகரில்..

மௌன எதிர்ப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

இன்றைய தினம் காலை 10-30 மணிமுதல் 10-32 மணிவரை குடாநாட்டிலுள்ள சகல பாடசாலைகள், உயர்கல்வி நிறுவனங்கள், அரச தனியார் வர்த்தக கூட்டுறவு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களில் சகல தரப்பினரையும் எழுதுகோலால் எழுதுவதை இடைநிறுத்தி எழுந்து நின்று இரண்டு நிமிடம் அஞ்சலி செலுத்துமாறும் வடஇலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் வேண்டுகோள்விடுத்துள்ளது. [ந-ஸ்ரீ]

ஒருமூடை நெல்லின் விலை 1லீற்றர் ம. எண்ணெய்

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பிரதேசத்தில் ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்350 ரூபாவாகவிற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெயின் விலையானது ஒரு மூடை நெல்லின் விலையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

# படைத் தரப்பில் எட்டுப்பேர் காயம்.

(கொழும்பு)

சரசாலை தெற்கு, எழுதுமட்டுவாழ், பகுதியிலமைந்துள்ள இராணுவ முன்னரங்க நிலைகள் மீது நேற்று விடுதலைப் புலிகள் நடத்திய சரமாரியான மோட்டார்த்தாக்குதலில் படைத்தரப்பில் 8 பேர் காயமடைந்துள்ளதாக விஷேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதே வேளை கோப்பாய் பகுதியில் கைக் குண்டு, மற்றும் சிறியரக ஆயுதங்கள் சகிதம் புலிகள் நடத்திய தாக்குதலை முறியடித்து விட்டதாகவும் நாகர்கோயில், சரசாலை, மட்டுவில்ப் பகுதிகளில் படையினர் தாக்குதல் நடத்தியதில் புலிகள் தரப்பில் இருவர் உயிரிழந்ததாகவும் விஷேட ஊடகத் தகவல் நிலையம் மேலும் அறிவித்துள்ளது. (ஸ்ரீ)

# ★ வவுனியா பாடசாலையின் அதிபரை மாற்றக் கோரி மாணவர்கள் பகிஷ்கரிப்பு

(வவுனியா)

வவுனியா நகரில் உள்ள பிரபல ஆண்கள் தேசிய பாடசாலை மாணவர்கள் அதிபரை இடமாற்றம் செய்யக் கோரி நேற்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

1850 மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலையில் நேற்று ஆறு மாணவர்கள் மட்டுமே சமூகம் கொடுத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்கு வந்தமாணவர்களும், ஆசிரியர்களும், பாடசாலை கேற் பூட்டப்பட்டு இருந்ததாகவும், அதனை அடுத்து அதிபர் பொலிசாருடன் தொடர்பு கொண்டு, பாடசாலை கேற்றை உடைத்ததாகவும் அதிபர் தெரிவித்துள்ளார்.

இதே வேளை இக் கல்லூரி சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொள்வதற்கு வடக்கு கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளரின் உத்தரவை அடுத்து வன்னிப் பிராந்திய மாகாண கல்விப்பணிப்பாளர் ஆர். விசாகலிங்கம் பாடசாலைக்கு விஜயம் செய்து அதிபர், ஆசிரியர்களுடன் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். (வ)

# மட்டக்களப்பில் மாபெரும் பேரணி

(ஏறாவூர்)

பண்டாரவளை விந்துனுவெவ புனர் வாழ்வு முகாமில் இடம் பெற்ற படுகொலைச் சம்பவத்தைக் கண்டித்து மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவக் கட்டுப் பாடற்ற பழுகாமம், கொக்கட்டிச் சோலைப்பகுதியில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெற்றது.

பொது ஜன அமைப்புகள் ஏற்பாடு செய்திருந்த இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

நேற்றுக் காலை 10மணிக்கு இடம் பெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில், வவுணதீவு, பட்டிப்பளை, கொக்கட்டிச் சோலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

பேரணி முடிவில் பட்டிப்பளை பிரதேச செயலகத்தில் ஜனாதிபதிக்கான மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (வ)

# கரவெட்டி இளைஞன் என இனங்காணப்பட்டது!

(கொழும்பு)

பண்டாரவளை புனர் வாழ்வு நிலையத்தில் இடம் பெற்றபடுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த தமிழ் இளைஞர்களில் மேலும் ஒருவரின் சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

கொழும்பு பொலிஸ் சவச் சாலையில் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்த 12 சடலங்களில்ஒன்று யாழ்ப்பாணம் கரவெட்டியைச் சேர்ந்த சிற்றம்பலம் முகுந்தன் என்பவருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது,

இவரது சடலத்தை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைப்பதற்கான ஏற்பாடுகளை தேசிய இளைஞர் சேவை மன்றம் மேற்கொண்டு வருகிறது.

இதே வேளை சடலத்தை அடையாளம் காண்பதற்காக உறவினர்களை தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ். அரவிந்தன் நேற்று கொழும்பு பொலிஸ் நிலைய சவச்சாலைக்குக்கூட்டிச்சென்றிருந்தார். (வ)

### சடலம்--

மலை, ஆனந்தபுரம் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ந-5)

கர்ப்பிணித்தாய்

## மரணம்

நாவலப்பிட்டிவைத்திய சாலைக்கு செல்லும் பாதையில் ஏற்படுத்தப்பட்டிருந்த வீதித் தடையினால் கர்ப்பிணித் தாய் ஒருவரை உடன் வைத்திய சாலைக்குக் கொண்டு செல்ல முடியாத நிலையில் அப் பெண் மரணமான பரிதாபச் சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

சாமிமலையில் இருந்து நாவலப்பிட்டி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கர்ப்பிணித் தாய் ஒருவரே இவ்வாறு மரணமானார். (வ)

இப் பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தினரால் இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 01ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.